# UNIT-1
# தொழில் பொருளாதாரம்
## Industrial Economics

## தொழில் இட அமைவு
(Industrial Location)

1. தொழில் செறிவிற்கான காரணங்கள் யாவை? (நவ 92)

### 1. தொழிலின் இடச்செறிவு: (Localisation of Industry)

ஒரு சில இடங்களில் ஒரு சில வகையான தொழில்கள் செழித்து வளருவதை தொழிலின் இடச்செறிவு எனலாம். உதாரணமாக பம்பாய், அக்மதாபாத், கோவை ஆகிய நகரங்களில் பருத்தி நெசவு ஆலைகள் அதிகம் காணப்படுகின்றன. கல்கத்தா நகரில் சணல் ஆலைகள் அதிகம் காணப்படுகின்றன. இவ்வாறு சிவகாசியில் தீப்பெட்டியும், கும்பகோணத்தில் பாத்திரமும், பத்தமடையில் பாயும் சிறப்பானத் தொழில்களாக இருக்கின்றன. தொழிலின் இடச் செறிவினால் நாட்டின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு பொருள் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கின்றது. இவ்வாறு ஈடுபட்டிருக்க பல காரணங்கள் உள்ளன.

**காரணங்கள்:** பென்ஹம், "மாநிலங்கள் ஏன் பல்வேறு பொருட்களில் சிறப்பாகத் தேர்ச்சிப்பெற்றுள்ளன என்பதற்கு முக்கியமான காரணம் பூமியின் மீது உற்பத்திக்காரணிகள் ஏற்றத்தாழ்வான விதங்களில் பங்கிடப்பட்டிருப்பதுதான்". என்று கூறுகின்றார். தொழிலின் இடச்செறிவிற்கான காரணங்களை பின்வருமாறு பிரித்துக் கூறலாம்.

**1. இயற்கை காரணங்கள்:**

அ) மூலப்பொருட்கள் கிடைக்கும் இடத்திற்கு வெகு அருகாமை

Scanned with CamScanner

யில் தொழில்கள் வளரும். அதாவது தொழில் நிறுவனத்திற்குத் தேவையான கச்சாப்பொருட்கள் எங்கு அதிகம் கிடைக்கின்றனவோ அந்த இடத்திற்கு அருகில் தொழில்கள் தொடங்கப்படும்.

ஆ) நிலக்கரி மற்றும் மின்சக்தி போன்ற எரிசக்தி எங்கு அதிகமாக குறைந்த செலவில் கிடைக்கின்றனவோ அங்கு தொழிற்சாலைகள் அதிகம் தோன்றும்.

இ) பொருத்தமான நில அமைப்பு, சீதோஷ்ணநிலை, தொழிலின் இடச்செறிவிற்குக் காரணமாக இருக்கின்றது. பம்பாயில் காற்றிலுள்ள ஈரப்பசை மற்றும் கரிசல்மண் பருத்தித் தொழில்வளர காரணமாக இருக்கின்றது.

**2. பொருளாதாரக் காரணங்கள்:**

(அ) பொருட்களுக்கான அங்காடி அருகாமையிலிருந்தால் அவ்விடங்களில் தொழில் செறிவு ஏற்படக்கூடும். இதனால் போக்குவரத்துச் செலவு குறையும். வாடிக்கையாளரோடு நேரடித் தொடர்பு கொள்ளலாம்.

(ஆ) பொருள் உற்பத்திக்குத் தேவையான நிதி வசதிகள் தரக்கூடிய வங்கிகள், பிற நிதி நிறுவனங்கள் அதிகமுள்ள இடங்களில் தொழில்கள் செறிந்து காணப்படும்.

(இ) போக்குவரத்து வசதிகள் அதிகமுள்ள இடங்களில் தொழிற்செறிவு ஏற்படலாம். ரயில்போக்குவரத்து, விமானப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து ஆகிய வசதியுள்ள இடங்களில் தொழில் இடச் செறிவு ஏற்படும்.

(ஈ) சிறப்புத் தேர்ச்சி பெற்றத் தொழிலாளர்கள், தொழில் நுணுக்கமறிந்த தொழிலாளர்கள் கிடைக்கும் இடங்களில் தொழில் நன்கு வளரும்.

(உ) அரசின் வரிச்சலுகை, அரசு ஆதரவுப்பெற்ற இடங்களில் தொழில் நன்கு வளரும்.

**3. பொருளாதாரமற்றக் காரணங்கள்:**

(அ) ஆரம்பத்தில் ஏதோ ஒரு காரணத்தினால் ஓரிடத்தில் ஒரு தொழில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும். நாளடைவில் அவ்விடத்தில் பல வசதிகள் தோன்றியிருக்கும். எனவே அதேப்பொருளை உற்பத்திச் செய்யும் நிறுவனங்கள் பல தோன்றலாம். இதை மார்ஷல் "ஆரம்பத்தில் ஏற்பட்ட தொழிற்செறிவு " என்று கூறுகின்றார்.

(ஆ) அரசியல் காரணமாகத் தொழிற்செறிவு ஏற்படலாம். டாக்காவில் மஸ்லீன் தொழில் முகமதிய அரசால் தோற்றுவிக்கப்பட்டதைக் கூறலாம்.

(இ) சமயப்பற்றுக் காரணமாக புனித இடங்களில் சில தொழில்



கள் தோன்றுகின்றன. சமயச் சார்புடையோர் அதிகம் வந்து செல்வதால் தொழில் பெருகுகின்றது.

இவ்வாறான பல்வேறு காரணங்களால் தொழில் இடச்செறிவு ஏற்படுகின்றது.

**தொழிற்செறிவின் நன்மைகள்:** தொழிற்செறிவினால் தொழிற்சாலைக்கு பல நன்மைகள் ஏற்படுகின்றன. இதை புறச்சிக்கனங்கள் என்று அழைக்கலாம்.

1) போக்குவரத்து வசதிகள் பெருகுகின்றன. 2) நிதி நிறுவனங்கள். வங்கி வசதிகள் பெருகுகின்றன. 3) துணைத் தொழில்கள் தோன்றுகின்றன. 4) திறமை மிக்கத் தொழிலாளர்கள் கிடைக்கின்றனர். 5) தொழில் பிரச்சினைகளை கலந்து ஆலோசித்துத் தீர்த்துக்கொள்ளலாம். 6) தொழிலாளர்களுக்கு வேண்டிய குடியிருப்பு வசதிகள், சுகாதார வசதிகள். கல்வி வசதிகள் பெருகும். மக்களின் வருமானம் உயர்ந்து வாழ்க்கைத் தரம் உயரும்.

**தீமைகள்:** 1) ஒரே இடத்தில் தொழில்கள் அதிகம் இருந்தால் போர்க்காலங்களில் எதிரிகளின் தாக்குதலுக்குட்படும். 2) தொழிலில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் பிரச்சினைகளை உண்டாக்கும். மந்த நிலையில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும். 3) ஒரு சில பகுதிகள் வளர்ச்சியடையும் பிற இடங்கள். வளர்ச்சிக் குன்றியிருக்கும், 4) தொழிற்செறிவினால் ஒரே இடத்தில் மக்கள் தொகை பெருகி சுகாதாரத்தில் சீர்கேடுகள் தோன்றலாம். இடநெருக்கடி தோன்றலாம். 5) போக்குவரத்தில் நெரிசல் ஏற்பட்டு இடையூறுகள் ஏற்படலாம்.

தொழில் இடச்செறிவினால் ஏற்படக்கூடிய சீர்கேடுகளை நீக்க தொழிலை பரவலாக்குதல் என்ற கொள்கை தற்போது பின்பற்றப்படுகின்றது.

**2. ஆல்பிரட் வெப்பரின் தொழிற் செறிவு பற்றிய கருத்தினை விளக்குக.**

## இட அமைவு கோட்பாடுகள்: (Theories of Location)

தொழில் இடவமைவு என்பது தொழில் அமையும் இடத்தை குறிக்கின்றது. தொழிலுக்கான இடத்தை தேர்ந்தெடுத்தல் மிக முக்கியமான ஒன்றாகும். நிறவனத்திற்கு அதிக நன்மைத் தரக்கூடிய இடவமைவு தொழில் அமைப்புக்கு ஏற்றது. தொழில் இடவமைவைப்பற்றி சில கோட்பாடுகள் உள்ளன. அவைகளில் முக்கியமானது ஆல்பிரட் வெப்பரின் இடவமைவுக் கோட்பாடாகும்.

**வெப்பரின் இட அமைவுக் கோட்பாடு: (Weber's Theory o**

Scanned with CamScanner

Location) ஆல்பிரட் வெப்பர் என்ற ஜெர்மானிய பொருளாதார அறிஞர் செலவு ஆய்வின் அடிப்படையில் தொழில் இடவமைவுக் கோட்பாட்டை விளக்கியுள்ளார். இவரது கருத்துப்படி சில செலவுகள் தொழில் இடவமைவுக்கு காரணமாகின்றது. வெப்பரின் கருத்துப்படி, போக்குவரத்துச் செலவு, உழைப்புச் செலவு இரண்டும், வட்டார தொழில் பகிர்வுக்கு பெரிதும் காரணமாகும்.

**போக்குவரத்துச்செலவு:** (Transportation costs) கச்சாப் பொருட்களை வாங்குவதற்கும் உற்பத்திச் செய்தப் பொருளை விற்பதற்கும் போக்குவரத்துச் செலவாகின்றது. இதனால்தான் தொழில் இடவமைவு கச்சாப் பொருள்கள் கிடைக்கும் இடத்திற்கு அருகிலேயே ஏற்படுகின்றது. ஒரு நிறுவனத்தை கச்சாப் பொருட்கள் கிடைக்கும் இடத்திற்கு அருகில் அல்லது உற்பத்திச் செய்தப் பொருட்கள் விற்பனையாகும் சந்தைக்கு அருகில் அமைப்பதென்பது போக்குவரத்துச் செலவைப் பொருத்ததாகும். போக்குவரத்துச் செலவில் கச்சாப்பொருட்களை நிறுவனத்திற்கு எடுத்துச்செல்லவும், விற்பனைப் பொருளை சந்தைக்கு எடுத்துச்செல்லவும் ஆகும் செலவுகள் அடங்குகின்றன.

போக்குவரத்துச் செலவைக் கணக்கிட கருவிகளை வெப்பர் இரண்டாகப் பிரிக்கின்றார். 1. எங்கும் நிறைந்து இருப்பது (Unbiquitious) 2. ஓரிடத்திலிருந்து (Localised) கிடைப்பது தண்ணீர், மணல், களிமண், செங்கல் போன்ற பொருட்கள் எங்கும் நிறைந்திருக்கும். இவை கிடைப்பதைப் பொறுத்து தொழில் இடவமைவு ஏற்படுவதில்லை. ஏனெனில் இவை எங்கும் நிறைந்திருப்பதாகும்.

இரும்பு, நிலக்கரி பாக்சைட் போன்ற தாதுப் பொருட்கள், சணல், பருத்தி போன்ற பயிர் வகைகள் சில பகுதியில் மட்டும் கிடைக்கக்கூடியவைகளாகும். இவ்வாறு ஒருசில இடங்களில் கிடைக்கும் சாதனங்கள் தொழில் இட அமைவுக்குக் காரணமாகின்றன. பீகார், ஒரிசா ஆகிய இடங்களில் இரும்பு, நிலக்கரி கிடைப்பதால் நமது இரும்பு ஆலைகள் இவ்விடங்களில் அதிகமாக அமைந்துள்ளதை இதற்கு எடுத்துக்காட்டாக கூறலாம்.

ஓரிடத்திலிருக்கும் சாதனங்கள் மொத்த (Gross) சாதனங்கள், தூய (Pure) சாதனங்கள் என இருவகையாகப் பிரிக்கப்படுகின்றன. மொத்த சாதனங்கள் அல்லது எடையிழக்கும் சாதனங்கள் உற்பத்தி செயல்முறையில் தனது எடையை இழக்கின்றது. உதாரணமாக அலுமினியத்தின் எடை பாக்சைட்டின் எடையை விடக்குறைவு. மொத்தச் சாதனங்களை பயன்படுத்துகின்ற தொழில்கள் சாதனங்கள் கிடைக்கின்ற இடத்திற்கு அருகில் இருந்தால் போக்குவரத்துச் செலவு குறைவாக இருக்கும்.



தூய சாதனங்கள், உற்பத்திச் செயல் முறையில் அதனுடைய எடையை இழக்காது. சாதனங்களின் முழு எடை அதனால் உற்பத்திச் செய்து முடிக்கப்பட்ட பண்டங்களின் எடைக்குச் சமமாக இருக்கும். உதாரணமாக பருத்தியின் எடையும் அதைப் பயன்படுத்திப் பெறுகின்ற நூலின் எடையும் ஏறத்தாழ சமமாக இருக்கும். தூய சாதனங்களைப் பயன்படுத்துகின்ற தொழில்கள் சந்தைக்கு அருகாமையில் அமையவேண்டும். சாதனங்கள் கிடைக்கும் இடத்திலேயே இத்தொழில் அமைக்கப்படுவதால் சிக்கனம் ஏற்படுவதில்லை.

**வெப்பர்:** எடை இழக்கும் தன்மையுடைய சாதனங்கள் தொழில் இடவமைவுக்கு அடிப்படை என்கிறார். தூய சாதனங்களை அதாவது எடை இழக்காத சாதனங்களை பயன்படுத்துகின்ற தொழில், சந்தைக்கு அருகாமையிலும் மொத்த சாதனங்களை அதாவது எடையிழக்கும் சாதனங்களை பயன்படுத்துகின்ற தொழில் சாதனங்கள் கிடைப்பதற்கு அருகாமையிலும் அமையும் என்று கருத்து தெரிவிக்கின்றார்.

**உழைப்புச் செலவு:** (Labour cost) வெப்பர் உழைப்பை தொழில் இடவமைவு நிர்ணயிக்கின்ற காரணியாகக் கூறுகின்றார். உழைப்புச் செலவு குறைவாக இருக்கின்ற இடங்களில் தொழில் இடச்செறிவு ஏற்படும். குறைந்த கூலியில் ஓரிடத்தில் கிடைக்கின்ற திறமையான தொழிலாளர்கள் இடவமைவை ஏற்படுத்துகிறார்கள்.

**போக்குவரத்துச்செலவு, உழைப்புச் செலவு - சரிசெய்தல்:** (Reconciliation of material cost, labour cost) போக்குவரத்துச் செலவு குறைவாக உள்ள பகுதியில் தொழில் இடவமைவு ஏற்படுவது சாதனங்களின் செலவை வைத்துப் பார்க்கும் பொழுது சிக்கனமாக இருக்கும். உழைப்புச் செலவை வைத்துப் பார்க்கும்போது தொழில் இடவமைவு இவ்விடங்களில் சிக்கனமாக இருக்காது. இந்நிலையில் இரு செலவுகளும் சரிசெய்யப்பட்டால் இடவமைவு ஏற்படலாம்.

**குவிதல்-பரவல் தொழில்கள்:** (Concentration and dispersal Industries or Agglomerative and Deglomerative factors) வெப்பர் சிறந்த வங்கி வசதிகள், நிதி வசதிகள், செய்தித் தொடர்பு முறை ஒரு குறிப்பிட்ட பகுதியில் தொழில்கள் குவிவதற்குக் காரணமாகும் என்று கூறுகின்றார். இவை காரணிகள் குவிதல் என அழைக்கப்படுகின்றது. சில காரணிகளின் தொழில்கள் குவிதலை தடுத்து பரவலாக்குகின்றன. உதாரணமாக ஒரு பகுதியில் தொழில்களின் குவிதல் இருந்தால் வாடகை வீதம், வரிகள், கூலி மற்றும் பிற செலவுகள் அதிகமாகும்.

Scanned with CamScanner

இதன் காரணமாக இப்பகுதியில் தொழில்கள் அமைவது குறைந்து பிறபகுதிகளுக்குச் செல்லும். இது தொழில்களின் பரவல் எனப்படுகின்றது.

இவ்வாறு ஆல்பிரட் வெப்பர், தொழில் இடவமைவுக்கான தனது கோட்பாட்டைத் தருகிறார். இக்கோட்பாட்டில் பல குறைபாடுகள் சுட்டிக் காட்டப்படுகின்றன.

**வெப்பர் கோட்பாட்டின் திறனாய்வு: (Criticisms of weber's Theory)**

1. இக்கோட்பாடு மிக எளிமையாகவும் ஆனால் உண்மைக்கு மாறாகவும் இருக்கின்றது.

2. இவர் இரு காரணிகளை அதாவது போக்குவரத்து, உழைப்பு இரண்டை மட்டும் எடுத்துக்கொள்கிறார். பிற காரணிகளின் பங்கை புறக்கணிக்கிறார்.

3. போக்குவரத்துச் செலவில் சாதனத்தின் எடை எடுத்துச்செல்லவேண்டிய தூரம், ஆகியவற்றை மட்டும் குறிப்பிடுகின்றார். போக்குவரத்து மூலம் (Mode of Transport) சாதனத்தின் தன்மை ஆகியவற்றைப் புறக்கணிக்கின்றார்.

4. இக்கோட்பாடு உழைப்பை இடம் பெயராத காரணியாகவும் கூலியை மாறாத காரணியாகவும் அனுமானித்துக் கொள்கிறது. ஆனால் நடைமுறையில் இவ்வாறு இல்லை.

5. வெப்பர் கோட்பாட்டின் முடிவு உழைப்புச் செலவையும், போக்குவரத்துச் செலவையும் அடிப்படையாகக் கொண்டது. ஆனால் இதனைக் கணக்கிடுவது கடினமாக இருக்கின்றது.

**3. தொழில் செறிவு தொடர்பான சார்ஜாண்ட் ப்ளோரன்ஸ் கோட்பாட்டை விளக்குக.**

## தொழில் செறிவு தொடர்பான சார்ஜாண்ட் ப்ளோரன்ஸ் கோட்பாடு: (Sargant Florence theory of Industrial Location)

சார்ஜாண்ட் ப்ளோரன்ஸ் என்பவர் தொழில் இடவமைவு தொடர்பாக ஒரு கோட்பாட்டைத் தந்துள்ளார். இக்கோட்பாடு நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது. இவர் வெப்பரின் நிபந்தனை உண்மையானதல்ல என்ற கருத்தைக் கொண்டிருந்தார். தொழில் இடவமைவிற்கு புவியியல் அம்சத்தை வலியுறுத்துவதை இவர் குறை கூறுகின்றார்.

சார்ஜாண்ட் ப்ளோரன்ஸ் கருத்துப்படி ஒரு தொழிலுக்கும் ஒரு பகுதிக்கும் இடையேயான தொடர்பு அதிக முக்கியத்துவம் பெறவில்லை. மொத்த மக்கள் தொகை பகிர்வுடன் தொடர்புடையது என்கின்றார். இடவமைவு என்பதை தொழிலுக்கும் புவியியல் பகுதிக்கும் இடையேயான தொடர்பு என்ற பொருளை ப்ளோரன்ஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. இவர் ஒரு நாட்டில் மக்கள் தொகை பகிர்விற்கும் தொழில் பகிர்விற்கும் இடையேயான தொடர்பு என்று தொழில் இடவமைவிற்கு விளக்கம் தருகின்றார்.



பல்வேறு தொழில்களின் இடச் செறிவின் அளவை கணக்கிட மக்கள் தொகைப் புள்ளி விவரத்தை ஒரு புள்ளியியல் அளவையாக கையாளுகின்றார். இவருடைய தொழில் இடவமைவுக் கோட்பாடு பகுத்தறிவு முறையைச் சார்ந்தது.

தற்போதுள்ள தொழில் இடவமைவை விளக்குவதற்கு அவருடைய தொழில் இடவமைவுக் கோட்பாட்டில் இரு புதிய கருத்துக்களை பயன்படுத்துகின்றார்.

1. இடவமைவு ஈவு (Location quotient) 2. தொழிற்செறிவு கெழு (Co-efficient of Localisation)

### 1. இடவமைவு ஈவு: (Location quotient)

இடவமைவு ஈவு ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு தொழிற்சாலை குவிந்து இருப்பதைக் காட்டும் குறியீடாகும். தொழிலில் ஈடுபடும் மக்களின் பகிர்வை தொழில் குவிந்து கிடப்பதுடன் ஒப்பிட்டு ஒரு பொதுவான தன்மையை இடச் செறிவு கெழு காட்டுகின்றது. இடவமைவு ஈவு இரு விகிதங்களைக் கொண்டு கணக்கிடப் படுகின்றது.

$$\frac{\text{ஒரு குறிப்பிட்டப் பகுதியில் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை}}{\text{நாட்டில் மொத்த தொழிற்சாலை தொழிலாளர்கள்}}$$

இவ்விகிதத்தின் மூலம் இடவமைவு ஈவு கணக்கிடப்படுகின்றது. ஈவு ஒன்றாக இருந்தால் இடவமைவு முழுமையாகும். அதாவது தொழில்கள் நாடு முழுவதும் சமமாக பரவலாக காணப்படுகின்றது. இடவமைவு ஈவு ஒன்றுக்கு அதிகமானால் தொழிற்சாலைகள் அப்பகுதியில் அதிகமாக இருக்கின்றது என்று பொருள். இடவமைவு ஈவு ஒன்றுக்கு குறைவாக இருந்தால் தொழிற்சாலைகள் அப்பகுதியில் போதுமான பங்கை பெறவில்லை எனலாம். இடவமைவு ஈவு பொதுவாக ஒரு நாட்டின் பகுதியில் அரசியல் பிரிவின் அடிப்படையில் அமைந்த பகுதிக்கு கணக்கிடப்படுகின்றது. புவியியல் ரீதியாக அல்லது பொருளாதார அடிப்படையில் கணக்கிடுவது, விஞ்ஞான பூர்வமாக இருந்தாலும் இதற்கு வாய்ப்பில்லை என்கின்றார்.

இடவமைவு ஈவு, பகுதிக்கு பகுதி வேறுபடுகின்றது.

Scanned with CamScanner

**2. இடச்செறிவு கெழு: (Co-efficient of Localisation)**

இடச்செறிவு கெழு ஒவ்வொரு தொழிற்சாலையும் குவிந்திருக்கும் நாட்டத்தை சுட்டிக் காட்டுகின்றது. இது ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலைக்கு உரியது. ஒரு பகுதிக்கு உரியது அல்ல. ஆனால் இது நாட்டில் உள்ள தொழில் செறிவு போக்கை குறிக்கின்றது.

இடச்செறிவு கெழு பின்வரும் வகையில் கணக்கிடப்படுகின்றது. 1. ஒவ்வொரு பகுதியிலும் காணப்படும் எல்லா தொழிலாளர்களின் சதவீதம் கணக்கிடப்படுகின்றது. 2. ஒவ்வொரு பகுதியிலும் உள்ள தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளர்கள் சதவீதம் கணக்கிடப்படுகின்றது.

3. இரண்டில் இருந்து ஒன்றின் விலகல்கள் (Deviation) சேர்க்கப்படுகின்றன. இவ்வாறு சேர்க்கப்பட்டது நூறால் வகுக்கப்படுகின்றது. இது இடச்செறிவுக் கெழுவை தருகின்றது. இடச்செறிவுக் கெழுவின் அடிப்படையில் நாட்டிலுள்ள எல்லாத் தொழில்களும் மூன்று இனங்களாகப் பிரிக்கப்படுகின்றன. அவை உயர், நடுத்தர மற்றும் குறைந்த கெழுவுடைய தொழிற்சாலைகள் ஆகும்.

இடச்செறிவு கெழு கணக்கிடுவதன் முக்கிய நோக்கம் பல்வேறு தொழிற்சாலைகளையும் அதனுடைய குவிப்புத் தன்மை அல்லது பரவல் தன்மையின் அடிப்படையில் பிரிப்பதற்கு ஆகும். தொழிற்சாலைகள் உயர் இடச்செறிவு கெழுவை பெற்றிருந்தால் பரவல் போக்கிற்கு வாய்ப்பில்லை. இதற்கு மாறாக குறைந்த இடச்செறிவுக் கெழு கொண்டிருந்தால் நாட்டின் பல பகுதிகளிலும் பரவிக்கிடக்கும் பொதுவான போக்கை காட்டுகின்றது. குறைந்த இடச்செறிவுக் கெழுவுடைய தொழிற்சாலைகள் பல்வேறு பகுதிகளிலும் பரவலாகச் செயல்படலாம். உயர் இடச் செறிவு கெழுவை கொண்ட தொழிற்சாலைகள் ( நிலக்கரி சுரங்கங்கள் போன்றன ஒரு குறிப்பிட்ட பகுதியில் தான் செயல்படலாம்)

**சார்ஜாண்ட் ப்ளோரன்ஸ் தொழில் இடச்செறிவுக் கோட்பாடு திறனாய்வு: (Criticism of Sargent florence theory of industrial Location)**

சார்ஜாண்ட் ப்ளோரன்ஸ் இடவமைவுக் கோட்பாடு குறைபாடு இல்லாத கோட்பாடு என்று எடுத்துக் கொள்வதற்கு இல்லை.

1. நாட்டில் தற்போதுள்ள தொழில் பரவல் நிலையை மட்டும் இக்கோட்பாடு வெளிப்படுத்துகின்றது.

2. இடவமைவு தேர்ந்தெடுப்பதற்கான [illegible]ணங்களை இக் கோட்பாட்டால் விளக்க முடியவில்லை.



3. ஒரு நாட்டின் தொழில் திட்டத்திற்கு வழிகாட்டுவதாக ப்ளோரன்ஸ் ஆய்வு உள்ளது. தற்போதுள்ள நிலையை ஆய்வு செய்வதையே இக்கோட்பாடு மேற்கொண்டுள்ளது.

4. இடவமைவு ஈவு அல்லது இடச்செறிவு கெழுவை கணக்கிட இக்கோட்பாடு பொருளாதார வட்டாரத்திற்கு பதிலாக அரசியல் வட்டாரத்தையே பயன்படுத்துகின்றது.

5. ப்ளோரன்ஸ் அளித்துள்ள இடச்செறிவு கெழு எல்லா நாடுகளுக்கும் ஒரே அளவாக இருக்காது. இது உள்ளூர் நிலைமைக்கும் தொழிலாளர் பகிர்வு போக்கிற்கும் உட்பட்டு வேறுபடுகின்றது.

6. இக்கோட்பாடு தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தொழிலாளர் எண்ணிக்கைக்கும் தொழிலின் உற்பத்திக்கும் இடையே ஒரு குறிப்பிட்ட விகிதம் இருப்பதாக அனுமானிக்கிறது. ஆனால் தொழில்கள் குவிந்திருப்பதை சுட்டிக் காட்ட போதுமானது அல்ல.

7. இக்கோட்பாடு தொழில் குவிதல், அல்லது பரவலுக்கு பல்வேறு காரணிகள் இருப்பதை சுட்டிக்காட்ட தவறிவிட்டது.

மேற்கூறிய குறைபாடுகள் ப்ளோரன்ஸ் கோட்பாட்டில் சுட்டிக்காட்டிய போதிலும் தற்போதுள்ள இடச்செறிவு தன்மையை ஆய்வு செய்ய இக்கோட்பாடு பெருமளவு உதவுகின்றது. இடச்செறிவுக் கெழு பரவலுக்கு வாய்ப்புள்ள தொழில்களை அறிவதற்கு உதவுகின்றது. இதன் மூலம் வட்டார வளர்ச்சி ஏற்படுத்தலாம்.

**4. தொழில் இட அமைவுக்கான அரசின் கொள்கை யாது?**

**தொழில்.இட அமைவு அரசின் கொள்கை: (Government policies influencing location and size of industries)**

அரசின் கொள்கைகளும் கட்டுப்பாடும் தொழில் ஒரே இடத்தில் அமைவதை பாதிக்கச்செய்கின்றது. தொழிலில். பின்தங்கிய பகுதிகள் வளர்ச்சியடைய மைய அரசும் மாநில அரசும் பலவிதமான சலுகைகளைத் தருகின்றது. இந்தியாவில் தொழில் அமைவதைப் பொருத்த அளவில் வட்டார சமன்பாட்டைக் கொண்டுவர சாதக சூழ்நிலைகள் உருவாக்கப்படுகின்றன. நமது நாடு பெரிய நாடாக அதிக மக்கள் தொகையையும், சாதனங்களையும் கொண்ட நாடாக உள்ளது. இதனுடைய தொழில் வளர்ச்சியில் புதிய தொழில் அமைவதை திட்டத்தின் மூலம் ஒழுங்குப்படுத்தலாம். 1956 தொழிற்கொள்கை தொழிலை ஒழுங்குப்படுத்துவதன் அவசியத்தை